15

கதைப் பாடல்

# முகராசி



மன்னர் ஒருவர் காலை நேரம்
மகிழ்ச்சி யோடு எழுந்தார்.
சன்னல் வழியாய் எதிரே இருந்த
சாலை தன்னைப் பார்த்தார்.

முருகன் என்னும் சலவையாளன்
முதுகில் மூட்டை சுமந்து
அரசர் முகத்தைப் பார்த்தபடியே,
அங்கே செல்லக் கண்டார்.

கண்டு அரசர் திரும்பும் போது
கவனக் குறைவால், அந்தோ!
சன்னல் கதவில் மோதிக் கொண்டார்,
தலையில் இரத்தம் வழிய

“சலவைத் தொழிலைச் செய்யும் ஒருவன்
சாலை வழியாய்ப் போவான்.
தலையில் குடுமி இருக்கும் அவனை
விரைவில் கொணர்க” என்றார்.

முருகன் தன்னைக் கொண்டு வந்து
முன்னே நிறுத்தி வைக்க
அரசர், தமது தலையைக் காட்டி
ஆத்தி ரத்தில் சொன்னார்:

“கண் விழித்தேன் உன் முகத்தில்
காயப் பட்டேன், அதனால்,
இன்றே உன்னைத் தூக்கில் இடுவேன்”
என்றே முழக்கம் செய்தார்.

முருகன் இதனைக் கேட்ட வுடனே
விழுந்து விழுந்து சிரித்தான்.
அரசர் கோபம் அதிகமாக
“அடக்கு சிரிப்பை” என்றார்.

“என்றன் முகத்தில் அரசர் விழித்தார்;
இரத்தக் காயம் அடைந்தார்.
மன்னர் முகத்தில் விழித்த தாலே
மரணம் எனக்கு, ஆஹா!

“இருவருடைய முகங்களுக்கும்
இருக்கும் ராசி தன்னை
சிறிது நேரம் நினைத்துப் பார்த்தேன்
சிரித்து விட்டேன்” என்றான்.

முருகன் சொன்ன பதிலைக் கேட்டு
மிகவும் வெட்கம் கொண்டு,
“சரிசரி, நீ போபோ” என்றே
தலை குனிந்தார் அரசர்!

குழந்தைக்கவிஞர்
அழ. வள்ளியப்பா

## அரும்பதங்கள்

**மன்னர்** - அரசர், வேந்தர்
**சாலை** - வீதி, தெரு
**ஆத்திரம்** - கோபம்
**முழக்கம்** - இடியோசை
**மரணம்** - இறப்பு

## கிரகித்தற் பயிற்சி

### பூரண வாக்கியங்களில் விடை தாருங்கள்.

1. மன்னர் சாலையில் யாரைக் கண்டார்?
2. மன்னருக்கு ஏன் தலையில் காயம் ஏற்பட்டது?
3. சலவைத் தொழிலாளியின் தோற்றம் எப்படி இருந்தது?

4. இங்கு தோற்றது யார்?
5. இப் பாடல்கள் மூலம் நீங்கள் பெறும் படிப்பினை என்ன?

## சொல்வளம்

### ஒத்தகருத்துச் சொற்கள்

☆ மகிழ்ச்சி - இன்பம், உவகை
☆ முகம் - வதனம்
☆ தலை - சிரசு
☆ கண் - நயனம்
☆ கை - கரம்
☆ இரத்தம் - குருதி
☆ கோபம் - சினம்

பாடல் அடிகளை நிறுத்தக் குறிகளை அவதானித்து வாசியுங்கள்.

இசையோடு வாசியுங்கள்.

இக் கதையுடன் தொடர்புபடுத்தக்கூடிய ஒரு பழமொழியை எழுதுங்கள். உங்களுக்குத் தெரிந்த ஐந்து பழமொழிகளை எழுதுங்கள்.

தமிழில் இருந்து சிங்களத்திற்கு மொழிபெயர்ப்போம்.

### சொற்கள்

| தமிழ் | | சிங்களம் | தமிழ் | | சிங்களம் |
|---|---|---|---|---|---|
| காடு | - | කැලෑව | கொடி | - | කොඩිය |
| பெரிய | - | ලොකු | நேரம் | - | වේලාව |
| அணில் | - | ලේනා | | | |

| சொற்றொடர் | | වාක්‍යාංශය |
|---|---|---|
| அகமகிழ்ச்சி | - | සිත් සතුට |
| அசாதாரண குணம் | - | අසාමාන්‍ය ගුණය |
| இகழ்ந்துரை | - | නින්දා පදය |
| இடைவிடா மழை | - | නොකඩවා වැස්ස |
| ஈடுசெய்தல் | - | පාඩුව පිරිමැසීම |

பதவிகள்

| **சிங்களம்** | | **தமிழ்** |
|---|---|---|
| දිසාපති | - | அரசாங்க அதிபர் |
| දිස්ත්‍රික් ලේකම් | - | மாவட்டச் செயலாளர் |
| ලිපිකරු | - | எழுதுவினைஞர் |
| විදුහල්පති | - | பாடசாலை அதிபர் |
| ගණකාධිකාරී | - | கணக்காளர் |

அலுவலகங்களின் பெயர்கள்

| **தமிழ்** | | **சிங்களம்** |
|---|---|---|
| அஞ்சலகம் | - | තැපැල් කාර්යාලය |
| போக்குவரத்துச் சபை | - | ගමනාගමන මණ්ඩලය |
| புகையிரத நிலையம் | - | දුම්රිය ස්ථානය |
| பிரதேசச் செயலாளர் அலுவலகம் | - | ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය |
| தொழில் அலுவலகம் | - | කම්කරු කාර්යාලය |

**வாக்கியங்கள்**

| | |
|---|---|
| படகு ஆற்றில் செல்லும் | ඔරුව ගඟෙහි යයි. |
| மாடு புல்லைத் தின்றது. | ගොනා තණ කෑවේය. |
| தேனீ தேன் எடுக்கும். | මීමැස්සා රොන් ගනියි. |

**சிறு பந்தி**

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அமெரிக்க ஐக்கிய குடியரசில் ஜோர்ஜ் வாஷிங்டன் என்ற பெயருடைய சிறுவன் ஒருவன் இருந்தான். ஒரு நாள் அவனே அமெரிக்காவின் ஜனாதிபதி ஆனான். அவன் சிறுவனாக இருந்தபோது ஜனாதிபதி ஆக வேண்டும் என்று கற்பனை செய்தான்.

අවුරුදු සිය ගණනකට පෙර, ඇමෙරිකා එක්සත් ජනපදය නම් රටේ, ජෝර්ජ් වොෂින්ටන් නමැති කුඩා ළමයෙක් සිටියේ ය. දවසක් ඔහු ඇමෙරිකාවේ ජනාධිපති ධූරයට පත්විය. ඔහු කුඩා කාලයේ ම තමා ජනාධිපති වන බව සිහින මැව්වේ ය.

## விளம்பரம்

| | |
|---|---|
| உடல் நலம் பேண,<br>சுபா உணவகத்தை நாடுங்கள்<br>ශරීර සෞඛ්‍යය රැකගන්න.<br>සුභා ආපනශාලාවට පැමිණෙන්න. | **சுபா உணவகம்**<br><br>සුභා ආපනශාලාව |

| | |
|---|---|
| சேமிப்புடன் எதிர்காலம்<br>**மக்கள் வங்கி** | ඉතිරි කිරීම සමඟ අනාගතයක්<br>මහජන බැංකුව |

## அறிவித்தல்

இன்று உலக சேமிப்புத் தினம்

**தேசிய சேமிப்பு வங்கி**

අද ලෝක ඉතිරි කිරීමේ දිනයයි.

ජාතික ඉතිරි කිරීමේ බැංකුව

## தலைப்புச் செய்திகள்

நாளை பாடசாலைகள் முதலாம் தவணைக்காகத் திறக்கப்படும்.
හෙට පාසල් පළමුවන වාරය වෙනුවෙන් විවෘත කරනු ලැබේ.

இன்று பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பாடநூல் விநியோகம் வைபவரீதியாக ஆரம்பிக்கப்படும்.
අද දින පාසල් සිසුන් සඳහා නොමිලේ පොත් බෙදාදීම උත්සවාකාරයෙන් ඇරඹේ.

## செயற்பாடு

**பின்வருவனவற்றைச் சிங்களத்தில் எழுதுங்கள்.**

1. மாவட்டச் செயலாளர்
2. அஞ்சலகம்
3. படகு ஆற்றில் ஓடும்.
4. உடல் நலத்தைப் பேணுங்கள்.
5. இன்று உலக சேமிப்புத் தினம்.

## இணை மொழிகள்

**பேச்சுவழக்கிலும் எழுத்து வழக்கிலும் பயின்று வருபவை இணை மொழிகள்.**

| | | |
|---|---|---|
| ஆய்ந்தோய்ந்து | - | ஆராய்ந்து |
| ஆற அமர | - | அவசரப் படாமல் |
| உற்றாரும் மற்றாரும் | - | அனைவரும் |

கடகட, மளமள என்பவை இரட்டைக் கிளவி. கிளவி என்றால் சொல் இதனை இரட்டை மொழி என்றும் கூறுவர். கலகல, பளபள என்பவை இரட்டை மொழிகள். இவை கல + கல என இணைந்தே பொருள் தரும். தனியே கல, பள என்பவற்றுக்குப் பொருள் இல்லை.

**சில இரட்டைக் கிளவிகள் வாக்கியங்களில் அமைக்கப் பட்டுள்ளன.**

- ✫ வாள் பள பள என மின்னியது.
- ✫ ஆற்றுநீர் சலசல என ஓடியது.
- ✫ கணீர்கணீரென மணி ஓசை கேட்டது.
- ✫ வதனா சந்திரிகாவின் காதில் கிசுகிசுத்தாள்.

### செயற்பாடு

பின்வரும் இணை மொழிகளின் கருத்தை எழுதுக.

1. ஆய்ந்தோய்ந்து
2. ஆற அமர
3. உற்றாரும் மற்றாரும்
4. உண்டியும் உறையுளும்
5. கண்ணும் கருத்துமாய்

பின்வரும் வாக்கியங்களிலுள்ள இடைவெளியை அடைப்புக்குள் தரப்பட்டுள்ள இரட்டைக் கிளவிகளுள் இருந்து பொருத்தமானதைத் தெரிவு செய்து பூரணப்படுத்துக.

1. நர்மதா ......................... (மடமட, தடதட, கடகட) என்று தங்கு தடையின்றி உரையாற்றினாள்
2. சாந்தன் புதிதாக வாங்கிய கத்தி ................. (வளவள, பளபள, தளதள) என்று மின்னியது.
3. தாகத்துடன் வந்த கேசா தண்ணீரை ........................ (படபட, கடகட, மடமட) என்று குடித்தாள்.